# கர்த்தரின்
## இறுதி ஜெபங்களிலிருந்து
### நமக்கான பாடங்கள்



# கர்த்தரின்

## இறுதி ஜெபங்களிலிருந்து

### நமக்கான பாடங்கள்

*Christian Questions* என்னும் வலையொலியில், ஏப்ரல் 22, 2019 அன்று ஒலிப்பரப்பப்பட்ட நிகழ்வு #1070 – இன் தமிழாக்கம்

தொகுப்பாளர்: சகோ. ரிக் மற்றும் ஜூலி அவர்கள்

**Copyright :**

*Christian Questions.com*

**Tamil Translated by :**

*www.foodfornewcreature.com*

***யோவான் 17:1, 2: இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து: பிதாவே, வேளை வந்தது, ... உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்.***

*குறிப்பாக, ஒருவர் நெருக்கடியின் மத்தியில் இருக்கும் சமயம், அவர் எப்படி ஜெபிக்கின்றார், மற்றும் எதற்காக ஜெபிக்கின்றார் என்பதை நாம் அறிய நேரிடின், அந்நபரைப் பற்றி நம்மால் நிறைய கற்றுக்கொள்ள முடியும் பிரியமானவர்களே. நாம் பேரதிர்ச்சியான மனவேதனையில் இருக்கையில், நாம் சாதாரணமாக இருப்பதைக்காட்டிலும் அதிக ஊக்கத்துடனும் விசுவாச உணர்வுகளுடனும் திடீரென்று தேவனை அணுகுவோமா? அல்லது நாம் நம் மீதும், நமக்கு உதவி தேவை என்பதிலும் மாத்திரம் கவனத்தைச் செலுத்திவிட்டு மற்றனைத்தையும் ஒதுக்கி வைத்திடுவோமா? பாருங்கள், தம்முடைய மனித ஜீவியத்தின் மிகவும் கடைசியான இராப்பகலிலும், இயேசுவானவர் தமது மாம்சீக ஜீவியமானது அதன் இறுதி மாவேதனையான அத்தியாயத்திலிருப்பதை அறிந்தவராய், தமது பிரியமான பிதாவிடம் மூன்று தனித்துவமான ஜெபங்களை ஏறெடுத்தார். இக்கதையின் முடிவில் பாவமும் மரணமும் ஜெயங்கொள்ளப்பட்டன என்பதை நாமனைவரும் அறிவோம். இம்மூன்று ஜெபங்களையும் ஆராய்வதன் மூலம், நாமும்கூட அத்தகைய ஜெயத்தினை அடைவதற்கு வழிவகுத்திட்ட இருதயம், சிந்தை, பக்தி மற்றும் பெலன் ஆகியவற்றை நன்றாக அறிந்துகொள்ள முடியும் அன்பானவர்களே.*

*...இயேசுவும் அவருடைய சீஷர்களும் மேல் வீட்டறையிலிருந்து கெத்செமனே தோட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த சமயம் அது. இந்த நடைப்பிரயாணத்தின்போதுதான் இயேசுவானவர் யோவான் 14, 15 மற்றும் 16 – ஆகிய அதிகாரங்களில் பதிவிடப்பட்டுள்ள பாடங்களைக் கொண்டு சீஷர்களை ஊக்குவித்திருந்தார். அவர்களுடைய பிரயாணத்தில்*

*நாம் சற்றுப் பின்சென்று, அவருடைய இறுதி மூன்று ஜெபங்களில் முதலாவதும் மிகவும் விரிவானதுமான – யோவான் 17 உடன் பாடத்தைத் துவங்கலாம் வாருங்கள்.*

**கர்த்தராகிய இயேசுவின் இறுதி மூன்று ஜெபங்களில் முதலாவது ஜெபம் – ஆயத்தத்தின் ஜெபமாகும் *(A Prayer of Preparation).***

*இயேசு தம்முடைய சீஷர்களுக்கு முன்பாக ஜெபம் செய்துகொண்டிருந்தார். அவர்கள் அதனைக் கவனித்துக்கேட்டுக் கொண்டிருந்தார்கள்... அவ்வாறே நாமும்கூட கவனிப்போமாக.*

***இயேசு துதியுடனும் தேவனுடைய பராமரிப்பின்மீதான ஒரு நம்புதற்கரிய விசுவாசத்துடனும் ஜெபத்தைத் துவக்கினார்:***

**யோவான் *17:1, 2:* இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து: பிதாவே, வேளை வந்தது, ... உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்.**



*அவர் சித்திரவதைச்செய்யப்பட்டு கொல்லப்படுவதற்கு சற்று முன்பு இந்த மகிமையின் பார்வையானது / தரிசனமானது (vision of glory) வருகின்றது.*

*இயேசுவுக்கு அழியாமையெனும் உன்னத பரிசினை அளிக்கும் காரியமானது எவ்வாறு பிதாவை மகிமைப்படுத்தும் காரியமாக இருந்திருக்கும்? என்று நாம் கேட்கக்கூடும். எவ்வாறெனில், இக்காரியமானது ஏதோ ஒரு மனிதனை மரித்தோரிலிருந்து உயிர்த்தெழச்செய்வது மாத்திரமல்லாமல், அவரின் சுபாவத்தையே தம்மைப் போன்ற*

*தெய்வீக ஜீவியாகவும் மாற்றும் தேவனுடைய எல்லையற்ற வல்லமையைக் காட்டியது. இதற்கு முன்பு இவ்வாறு நடந்ததில்லை. பிதாவாகிய தேவன் (தம்முடைய வல்லமையைக்கொண்டு) தூதர்களைச் சிருஷ்டித்திருக்கிறார்; கர்த்தராகிய இயேசு மனிதனாக வருவதற்கு முந்தியிருந்த இந்நிலையைத்தான் வேதாகமம் விடிவெள்ளி என்றழைக்கின்றது. ஆனால் இதற்கு முன் ஒருபோதும் (இவர்களுக்கெல்லாம்) அழியாமை வழங்கப்பட்டிருக்கவில்லை, அதாவது, வெளிப்புற ஆதாரத்தைச் சார்ந்திராத ஜீவநிலை என்பது யாருக்கும் அருளப்பட்டிருக்கவில்லை. அவரது மரணமும், பிரபஞ்சத்தில் இந்த நம்புதற்கரிய ஒரு நிலைக்கு உயர்த்தப்படுதலும் தேவனுடைய மகிமையையே காட்டின.*

***இதற்கு அடுத்ததாக இயேசு, தேவன் தமக்கருளின தம்முடைய சொந்த ஸ்தானத்தையும் (position) அதிகாரத்தையும் (authority) அங்கீகரித்தார்:***

***யோவான் 17:2 – 4: பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங்கொடுத்தபடியே, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும். ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன். பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்.***

*தேவனுடைய திட்டங்களுக்கும் நோக்கங்களுக்குமான தம்முடைய உண்மையுள்ள உக்கிராணத்துவத்தைப் பற்றி இயேசு இங்குக் கணக்குக் கொடுக்கின்றார்.*

***நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்து*** *– இம்முறை மாத்திரமே இயேசு தம்மைதாமே "மேசியாவாகிய இயேசு" என அர்த்தப்படும் வகையில்,* ***"இயேசு கிறிஸ்து"*** *என்று*

*குறிப்பிட்டிருந்தார். பிதாவாகிய தேவன் தம்மை எதைச் செய்வதற்காய் அனுப்பியிருந்தாரோ அதை தான் நிறைவேற்றிவிட்டதாக அவர் இங்கு அங்கீகரிக்கின்றார்.*

***கர்த்தராகிய இயேசு பிதாவாகிய தேவனுக்கு மகிமையைக் கொடுத்து, தம்முடைய செயல்களுக்குக் கணக்குக் கொடுத்தப் பிறகே அவர் பிதாவாகிய தேவனிடம் வேண்டுதல்களை முன்வைக்கின்றார்:***

***யோவான் 17:5: பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்.***

*அவர் தமக்கென்று கேட்டுக்கொண்டதெல்லாம், அவர்கள் இருவரும் முன்பு இருந்ததைப் போலவே, இப்போதும் மீண்டும் இணைந்திருக்க வேண்டுமென்பதே ஆகும். இயேசு மனிதனாக வருவதற்கு முந்தியிருந்த நிலையை விவரிக்கும்வகையில் பல வேத வாக்கியங்கள் இருக்கின்றன.*

***அவற்றில் சில பின்வருமாறு:***

***கொலோசெயர் 1:13 – 16: இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். [குமாரனாகிய] அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. அவர் [இயேசு] அதரிசனமான தேவனுடைய தற்சூருபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.***

***நீதிமொழிகள் 8: 22 – 30: கர்த்தர் தமது கிரியைகளுக்குமுன் பூர்வமுதல் என்னைத் தமது வழியின் ஆதியாகக்கொண்டிருந்தார். பூமி உண்டாகுமுன்னும், ஆதிமுதற்கொண்டும் அநாதியாய் நான் அபிஷேகம்பண்ணப்பட்டேன். ஆழங்களும், ஜலம் புரண்டுவரும் ஊற்றுகளும் உண்டாகுமுன்னே நான் ஜநிப்பிக்கப்பட்டேன். மலைகள் நிலைபெறுவதற்கு முன்னும், குன்றுகள் உண்டாவதற்கு முன்னும், அவர் பூமியையும் அதின் வெளிகளையும், பூமியிலுள்ள மண்ணின் திரள்களையும் உண்டாக்குமுன்னும் நான் ஜநிப்பிக்கப்பட்டேன். அவர் வானங்களைப் படைக்கையில் நான் அங்கே இருந்தேன்; அவர் சமுத்திர விலாசத்தை வட்டணிக்கையிலும், உயரத்தில் மேகங்களை ஸ்தாபித்து, சமுத்திரத்தின் ஊற்றுகளை அடைத்து வைக்கையிலும், சமுத்திர ஜலம் தன் கரையை விட்டு மீறாதபடிக்கு அதற்கு எல்லையைக் கட்டளையிட்டு, பூமியின் அஸ்திபாரங்களை நிலைப்படுத்துகையிலும், நான் அவர் அருகே செல்லப்பிள்ளையாயிருந்தேன்; நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்து, எப்பொழுதும் அவர் சமுகத்தில் களிகூர்ந்தேன்.***

*தேவனுடைய முதலாவது நேரடியான சிருஷ்டிப்பாக, கர்த்தராகிய இயேசுவானவர் (யோவான் எழுதிய புஸ்தகத்தின்படி முந்தி லோகோஸ் என்றழைக்கப்பட்டார்) பூமிக்கு அனுப்பப்படுவதற்கு முன்பு தேவனுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தார். இச்சோதனையின் மூலம், பரமபிதாவை விட்டுப் பிரிந்ததில் அவர் அடைந்திட்ட துக்கத்தையும் வலியையும், நாம் புரிந்துகொள்ள இது உதவுகின்றது.*

*அடுத்ததாக, இயேசு ஜெபத்தைப் "பூமியின் பக்கமாகக்" கொண்டுவந்து, தம்முடைய பின்னடியார்கள்மேல் கவனஞ்செலுத்தத் துவங்கினார்.*

***அவர் தமது பிதாவிடம் தமது இருதயத்தை ஊற்றும்போது, சீஷர்கள்மீதான தமது அன்பும், பாதுகாப்பு உள்ளுணர்வுகளும் வெளிப்படத் துவங்கின:***

***யோவான் 17:6 – 7, 9: நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள். … நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே. …***



தம்முடைய பின்னடியார்கள் தேவனால் அழைக்கப்பட்டவர்கள், எனவே அவர்கள் தேவனுடையவர்கள் என்பதால் அவர்கள்மீதான தம்முடைய உக்கிராணத்துவத்திற்காக இயேசு பணிவுடன் கணக்குக் காட்டுகிறார். மரிக்கப்போகிறவர் கர்த்தராகிய இயேசுதான் என்றாலும், ***அவரோ தம்முடைய இருதயத்திலும் சிந்தையிலும் சீஷர்களைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தார்.***

*ஜெபத்தில் கர்த்தரை அணுகுவது பற்றி இங்குக் கிடைக்கும் பாடங்களை நாம் கவனிப்பது நலமாயிருக்கும். நாம் ஓர் உணர்ச்சிகரமான சூழ்நிலையை எதிர்க்கொள்ளுகையில், உணர்ச்சியை ஒதுக்கி வைத்துவிட்டு, நம்மைச் சரியான மனப்பான்மையில் வைத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும். ஏதேனும் கோபமிருப்பின் அதனைக் கைவிட்டுவிட்டு, நம்முடைய மனதை அமைதிப்படுத்த முடியும்பட்சத்தில், அது சர்வலோகத்தைச் சிருஷ்டித்தவருக்கு முன் செல்வதற்கு ஏதுவான முழுமையான பயபக்திக்குரிய "பாதுகாப்பான இடமாக" மாறும் பிரியமானவர்களே. இந்த வகையான பயபக்தியுள்ள ஜெபத்திற்கே இயேசு ஆயத்தமானார்.*

***ஆயத்தத்தின் ஜெபம்:***

***எந்தவொரு சோதனையான அனுபவத்திற்கும் ஆயத்தமாயிருக்க வேண்டுமெனில், கர்த்தராகிய இயேசு செய்ததைப் போல, நாம் எப்பொழுதும், முதலில், துதிச் செலுத்திவிட்டு, நாம் பெற்றுள்ள கிருபையான ஸ்தானத்துக்கான கணக்கைக் காட்டிவிட்டு, பின்னர் அக்காரியங்களுக்கு ஏற்றவாறு வேண்டுதல்களை முன்வைத்திட வேண்டும்.***

***இயேசுவின் ஜெப மனப்பான்மையானது நம்மைச் சற்று நிறுத்திச் சிந்திக்க வைக்கின்றது, அதாவது நமது கடினமான அனுபவங்களை நாம் எதிர்க்கொள்ளும் வேளையில், நாம் அவரைப்போல தெளிவான சிந்தையுடன் இருப்போமா? என்பது குறித்துச் சிந்திக்க வைக்கின்றது.***

*இங்கே இயேசுவின் ஜெபத்தினுடைய கண்ணோட்டமானது ஒரு குறிப்பிடத்தக்க முன்மாதிரியான ஜெபமாக இருக்கின்றது. இயேசுவே பிடிக்கப்படவும், அடிக்கப்படவும், குற்றஞ்சாட்டப்படவும், விசாரிக்கப்படவும், கேலிச்செய்யப்படவும், அவமதிக்கப்படவும், சிலுவையிலறை-யப்படுவும் போகிறவராயிருந்தார். ஆயினும் அவரது இருதயம்,*

அவரது கவனம், அவரது சிந்தை என அனைத்தும் தாம் நேசித்தவர்கள்மீதே உறுதியாக இருந்தன. தேவ சித்தத்தையே நாடுபவர்களாயிருக்கும் அனைவருக்கும் மாபெரிய பாதுகாவலரான பரமபிதாவிடம், சீஷர்களைப் பரிவுடனும் கவனத்துடனும் ஒப்படைக்காமல் அவர்களை சும்மா விட்டுவிடவில்லை– அவரால் விட்டுவிடவும் முடியவில்லை.

சில சமயங்களில் தங்களுடைய சக மனிதனுக்காக இப்படிப்பட்ட அன்பு கொண்டு, அவர்களுக்காக தங்களுடைய உயிரையும் பணயம் வைக்கும் ஜனங்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

**உதாரணம்:**

*Unknown History, BitmapAxis எனும் யூடியூப் சேனலில், விட்டோல்ட் பிலெக்ஸ்கி என்பவர் பற்றிய 'Witold Pilecki – Unsung Hero of WWII' எனும் பதிவில் வரும் முன்னுரையிலிருந்து எடுக்கப்பட்ட தகவல் பின்வருமாறு:*

- *இரண்டாம் உலகப் போரின் மிகப்பெரிய வீரர்களில் (heroes) இவரும் ஒருவர். இவர் பிடிபடுவதற்குத் தானாக முன்வந்து தன்னை ஒப்புக்கொடுத்த மனிதனாவார், பின்னர் அவுஷ்விட்சுக்கு (Auschwitz) அனுப்பப்பட்டார்; அங்கு இவர் வதை முகாமில் (concentration camp) இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தங்கியிருந்து தகவல்களைச் சேகரித்து, எதிர்ப்பு படைகளை ஏற்பாடுபண்ணிவந்தார். நாசி அட்டூழியங்கள் மற்றும் யூதர்களை அழிப்பதற்கான ஜெர்மானியரின் திட்டங்களைக் கூட்டாளிகளுக்குத் தெரிவித்தவர். போலந்து இராணுவத்தின் தளபதியாக (captain) இருந்தவர், அவருடைய பெயர் விட்டோல்ட் பிலெக்ஸ்கி ஆகும்.*

இந்தத் தானாக முன்வரும் மனப்பான்மையானது இயேசுவையே நமக்கு நினைப்பூட்டுகின்றது:

***ஏசாயா 6:8: பின்பு: யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்.***

***இயேசு தமது ஆயத்தத்தின் ஜெபத்தைத் தொடர்ந்துகொண்டிருக்கையில், அது இப்போது பாதுகாப்பிற்கான ஜெபமாக உருவானது:***

***யோவான் 17:11: நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்.***

*இயேசு தம்முடைய சீஷர்களுக்கு முன்பாக ஜெபித்துக்கொண்டிருந்தார்; ஆக, இந்த வார்த்தைகள் அவர்களைப் பலப்படுத்தியிருந்திருக்க வேண்டும். தாம் இல்லாத உலகத்தில் இனி அவர்கள் இருக்கப்போகிற அவர்களின் பாதுகாப்பற்ற நிலையினை தேவனுக்கு முன்பாக வைப்பதன் மூலமாக, அவர்களின் பாதுகாப்பிற்காகவும் ஆசீர்வாதத்திற்காகவும் இயேசு தொடர்ந்து வேண்டுதல் செய்திருக்கின்றார்.*

*பிதாவாகிய தேவனும், கர்த்தராகிய இயேசுவும் ஒரே ஒற்றுமையின் ஆவியைப் பெற்றிருக்கிறார்கள். இது எதை அர்த்தப்படுத்துகிறதெனில், இயேசு தேவசித்தத்தின்கீழ் தம்மைச் சரியாக வைத்திருந்தார் என்பதேயாகும், ஆக இந்த ஒற்றுமைக்கு ஒத்தவாறு தம்முடைய பின்னடியார்களும் ஒன்றாக இருக்க வேண்டுமென்று அவர் வேண்டிக்கொண்டார். ஒற்றுமையின் படிநிலை என்று ஒன்றிருக்கிறது – அதில் தனித்தனி சித்தங்களென இருப்பதில்லை. பிதாவின் சித்தமே உள்ளது, அதன்கீழ் சிருஷ்டிப்பின் அனைத்து உண்மையுள்ளவர்களும் வரிசையாக*

*இருக்கிறார்கள். இதுவே இணக்கமாகும். இதுவே தேவனுக்குக்கீழாக ஒன்றாக இருத்தலாகும்.*

### "மேலிருந்து கீழான" கிறிஸ்தவ ஐக்கியம்:




*பொதுவாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதைக் கண்டறியும் ஒற்றுமையைக் குறிப்பதற்கு ஒரு வட்டத்தைப் பயன்படுத்துவதுண்டு. ஆனால், இதுவோ இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தின் மூலம் கண்டிப்பாக தேவ சித்தத்தின் கீழாக இருக்கும் ஓர் ஒற்றுமையாகும் / ஐக்கியமாகும் (unity). நமது ஒற்றுமை / ஐக்கியம் அந்த உன்னத வழிகாட்டுதல்களுக்குக் கட்டுப்பட்டதாகும். எனவே, இதுவொரு "மேலிருந்து கீழான" ஒற்றுமை / ஐக்கியமாகும் ("top down" unity).*

*தாம் சென்றபின், பிதாவோடு ஒன்றிப்போவதுபோல, தம்மூலமாக அவர்கள் பிதாவை அறிந்துகொள்ளும்படிக்கு இயேசு ஜெபித்தார். அவர்கள் குமாரன் மூலம் பிதாவின் பிரதிபலிப்பைக் காண முடிந்தது; குமாரன் சென்றபின், பிதாவை நேரடியாக அறிந்துகொள்ளுமளவிற்குப் பிரதிபலிப்பைப் (ஏற்கனவே) பார்த்துவிட்டார்கள்.*

***இயேசு தம்முடைய அன்பான சீஷர்கள்மீதான அக்கறையுடன்கூடிய உக்கிராணத்துவத்தினை நிறைவேற்றியதை அடுத்ததாகக் கூறுகிறார்:***

***யோவான் 17:12, 14: நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்; நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக்கொண்டுவந்தேன்; வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக,***

***கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை.... நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது.***

*தேவன் தம்மைப் பின்பற்றுபவர்களுக்குத் தேவையானதை வழங்கும்படிக்கு அதற்கான காரணத்தை இயேசு முன்வைக்கின்றார். தீர்க்கதரிசனமுரைக்கப்பட்டுள்ளபடி,* ***கேட்டின் மகன்*** *மாத்திரமே இழந்துபோகப்பட்டிருந்தான். அவரை மறுதலிக்கவிருந்த பேதுருவும்கூட இழக்கப்படவில்லை. ஒருவேளை பேதுருவின் மாபெரிய தவறுக்குப் பிறகு இது அவருக்கு ஓர் ஆறுதலாகக்கூட இருந்திருக்கும்.*

***நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல*** *– இங்கே நமக்கு "உலக" ஆவிக்கான ஒரு மறைவான குறிப்பு (hint) இருக்கின்றது. நாம் இந்த உலகத்தில், குடிமக்களாக இருப்பதைக்காட்டிலும் ஸ்தானாபதிகளாகவே இருக்க வேண்டும். இயேசுவுக்காகப் போராட பேதுரு பட்டயத்தை உருவினபோது, உலகத்தின் ஆவி ஊடாக வந்தது. உலகத்தின் ஆவி என்பது நமது மாம்சீகரீதியான தர்க்கத்தையும், காரணத்தையும் தேவனுடைய மேற்பார்வைக்கு முந்தி/முன்பாக (placing before) வைப்பதாகும் அல்லது நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லாதபோது தப்பி ஓடுவதாகும்.*

***அவர்கள் தேவனுடைய கரங்களில் பாதுகாப்பாக இருப்பார்களென்பதை இயேசு அறிந்திருந்தாலும் அவர்களை அப்படியே விட்டுவிடவில்லை:***

***யோவான் 17:15 – 18: நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம். நீர் என்னை உலகத்தில்***

***அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்.***

*தேவ சித்தத்தைச் செய்ய இயேசு தம்மைப் பிரித்துக்கொண்டது போலவே, தம்மைப் பின்பற்றுபவர்களும் தேவனுடைய வார்த்தையால் பரிசுத்தமாக்கப்பட வேண்டமென்று இயேசு அடுத்ததாக வேண்டுதல்செய்தார். அவர் ஒருபோதும் எவ்விதமான மகத்துவத்திற்காகவோ, ஐசுவரியங்களுக்காகவோ அல்லது அதிகாரத்திற்காகவோ ஜெபிக்கவில்லை என்பதைக் கவனிக்கையில் சுவாரஸ்யமாக உள்ளது. அவர்கள் பாவத்திலிருந்தும், உலகத்தின் சீரழிவிலிருந்தும் காக்கப்படவும், அதற்கான பெலன் கிடைக்கப்பெறவும் வேண்டுமென்பதே அவருடைய ஜெபமாக இருந்தது.*

*(ஆதாரம்: மேத்யு ஹென்றியின் வேதாகம விளக்கவுரை) அவர் செய்ததைப் போல, ஓர் எதிரி தேசத்தினூடாகக் கடந்து செல்வது போன்று, அவர்கள் உலகத்தினூடே கடந்துசெல்ல வேண்டியிருந்தது…உண்மையான கிறிஸ்தவர்களுக்குள் இருக்கும் தேவ ஆவியானது உலகத்தின் ஆவிக்கு (முற்றிலும்) எதிரானதாக இருக்கும்.*

***சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்*** *– பரிசுத்தமாக்குதல் என்றால் “ஒரு பரிசுத்தமான நோக்கத்திற்காகப் பிரித்து வைப்பது” ஆகும். நாம் செய்யும் எல்லாவற்றிலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டுமென்கிற ஒரு பரிசுத்தமான நோக்கத்திற்காகவே நாம் பிரித்து வைக்கப்பட்டுள்ளோம் என்ற எண்ணத்துடன் நாம் நமது அன்றாட வேலைகளை மேற்கொண்டால், நாம் பல்வேறு சவால்களை எதிர்க்கொள்ளும்-போது, நாம் வித்தியாசமாக செயல்படவும், பேசவும், சிந்திக்கவுஞ்செய்வோம் அன்பர்களே. நம்மிடம் உலக ஆவி இருக்குமளவிற்கு, நாம் உலகப்பிரகாரமாகவே செயல்படுவோம், அது தேவனை மகிமைப்படுத்தாது.*

***அடுத்ததாக, சுவிசேஷயுக காலத்தில் தம்மைப் பின்பற்றும்***

***ஒவ்வொரு கிறிஸ்தவரையும் இயேசு தம்முடைய ஜெபத்தில் சேர்த்துக்கொண்டார்:***

**யோவான் *17:19 – 21:* அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன். நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் *(இது நாம்தான்!)* வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.**

*தேவனால் அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டதன் அடிப்படையில், இயேசு இப்போது தம்மைப் பின்பற்றுபவர்கள், தாமும் தம்முடைய பிதாவும் பெற்றிருக்கும் அந்த மாபெரும் ஐக்கியத்தில் பங்குகொள்ளும்படி வேண்டுதல்செய்தார். தேவனுடைய சித்தத்தின் கீழிருக்கும் இயேசுவின் தலைமையின்கீழ் நாம் ஒன்றுபட வேண்டும். இயேசு தம்முடைய வாழ்வின் மாபெரும் சோதனையானது துவங்குவதற்கு முன் ஜெபிக்க முடிந்த கடைசி அமைதிக்குலையாத ஜெபத்தில் நாமும் சேர்க்கப்பட்டிருந்திருக்கிறோம் பிரியமானவர்களே!*



*இவை அவருக்கு ஆயத்தத்தின் விலையேறப்பெற்ற தருணங்களாக இருந்தன, மேலும் அவருடைய சீஷர்களின் ஜீவியங்களுடன் நம்முடைய ஜீவியத்தையும் தேவனுடைய கரங்களில் ஒப்படைக்க அத்தருணங்களைப் பயன்படுத்துவது பொருத்தமானதாகக் கண்டார்.*

***பாடுபடுபவர் அவராக இருந்தபோதும், அவர் நம்மைப் பற்றியே நினைத்திருந்தார்:***

***யோவான் 17:22, 24: நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ...பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்.***

*இயேசு தமது ஜெபத்தை ஆரம்பித்த இடத்திலேயே முடிக்கவுஞ்செய்தார், அதாவது, பிதாவின் குணத்திற்காகவும் திட்டத்திற்காகவும் அவருக்கு மகிமைச்செலுத்தி நிறைவுசெய்தார்.*

***ஆயத்தம் மற்றும் பாதுகாப்பிற்கான ஜெபம்:***

***நாம் ஆயத்தப்பட்டு, நமக்காகவும் மற்றவர்களுக்காகவும் பாதுகாப்பை நாடும்போது, மறைவான ஆபத்துக்களைக் குறித்து எச்சரிக்கையாக இருந்து, தேவனுடைய பரிசுத்தமான வார்த்தையைப் பற்றிக்கொண்டு, எப்போதும் நம்முடைய பரமபிதாவை மகிமைப்படுத்திக்கொண்டிருப்போமாக.***

***இது உண்மையிலேயே ஓர் ஆழமானதும், இணைக்கப்பட்டதும் மற்றும் தன்னலமற்றதுமான ஜெபமாகும்!***
***இந்த ஜெபத்திற்கும் இயேசுவினுடைய அடுத்த ஜெபத்திற்கும் இடையில் என்ன மாற்றம் உள்ளது?***
***வாருங்கள் பார்க்கலாம்!***

***யோவான்*** *17 – ஆம் அதிகாரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஜெபமானது, இயேசுவின் மாம்சீக ஜீவியத்தினுடைய கடைசி அமைதியான தருணங்களாக இருந்தது, ஏனெனில் அதன்பின்பு அவர் இரக்கமின்றி பாடுபட வேண்டியது, நமது இரட்சிப்புக்கான பாதைக்குத் தேவைப்பட்டது. ஒருவேளை, கற்பாறைகளிலிருந்து பலியின் கொந்தளிப்பான தண்ணீரில் குதிப்பதற்கு முன்பதாக, இந்த ஜெபமானது நன்மை, கிருபை மற்றும் ஐக்கியம்*

*ஆகியவற்றின் அவரது கடைசி ஆழமான மூச்சாக இருந்திருக்கக்கூடும்.*

***Unknown History, BitmapAxis* எனும் யூடியூப் சேனலில், விட்டோல்ட் பிலெக்ஸ்கி என்பவர் பற்றிய *'Prisoner 4859, Witold Pilecki – Unsung Hero of WWII'* எனும் பதிவிலிருந்து எடுக்கப்பட்ட தகவல் பின்வருமாறு:**



- ***1940களில், அவுஷ்விட்ஸ் என்பது, போர்க் கைதிகளுக்கான ஒரு முகாமாக அல்லது பெரிய சிறைச்சாலையாக நம்பப்பட்டது, மேலும் ஜெர்மானியர்கள் அங்கு என்ன செய்யத் திட்டமிட்டுள்ளனர் என்பதை ஒருவரும் அறியாதிருந்தார்கள். அவுஷ்விட்சில் உள்ள வதை முகாமுக்குள் நுழைந்து, தகவலைச் சேகரித்து எதிர்ப்பை ஒழுங்கமைக்க ஏதுவாக பிலெக்ஸ்கி ஒரு திட்டத்தை தீட்டினார். உள்ளே நுழைந்ததும், அவருக்குக் கைதி எண் 4859 என்பது ஒதுக்கப்பட்டது; உடனடியாக 1942 மார்ச்சில் சுமார் 500 கைதிகளைக் கொண்ட எதிர்ப்பு அமைப்பை ஒழுங்கமைக்கத் தொடங்கினார். பிலெக்ஸ்கி கையால் அறிக்கைகளை எழுதத் தொடங்கினார். அவைகள் லண்டனுக்கு, நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டிருந்த போலந்து அரசாங்கத்திற்கு இரகசியமாகக் கடத்தப்பட்டன.***

**நடந்ததை ஏற்றுக்கொள்வதென்பது எந்தவொரு துரதிர்ஷ்டத்தின் விளைவுகளையும் ஜெயங்கொள்வதற்கான முதல் படியாக இருக்கின்றது.**

**- வில்லியம் ஜேம்ஸ்**

*நம்முடைய ஜீவியத்தில் தீவிரமான அழுத்தத்தை எதிர்க்கொள்ளும்வேளையில், பெலனையும் சமாதானத்தையும் நமக்குக் கிடைக்க உதவுகின்ற வகையிலிருக்கும் நமக்கு விருப்பமான இடங்களையோ அல்லது சூழல்களையோ*

*நாமனைவரும் பெற்றிருப்போம். அத்தகைய இடமாக இயேசுவுக்கு கெத்செமனே தோட்டம் இருந்தது, ஏனெனில் அவரது பரமபிதாவுடன் ஆழமாகத் தொடர்புகொள்வதற்கு ஏதுவான பழங்கால அழகும் எளிமையானதுமான ஓர் இடத்தை அது அவருக்கு வழங்கியது.*

***யோவான் 18:1 – 2: இயேசு இவைகளைச் (யோவான் 17 – ஆம் அதிகாரத்தில் அவருடைய ஜெபத்தின் வார்த்தைகளைச்) சொன்னபின்பு, தம்முடைய சீஷருடனேகூட கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போனார்; அங்கே ஒரு தோட்டம் இருந்தது, அதிலே அவரும் அவருடைய சீஷரும் பிரவேசித்தார்கள். இயேசு தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி அங்கே போயிருந்தபடியினால், அவரைக் காட்டிக்கொடுக்கிற யூதாசும் அந்த இடத்தை அறிந்திருந்தான்.***

*இந்த அழகிய தோட்டமானது, எப்போதும் இயேசுவுக்குச் சமாதானத்திற்கான மற்றும் ஐக்கியத்திற்கான இடமாக இருந்தது; ஆனால், அந்தோ, சற்று நாழிக்கைக்குப் பின்பு அது ஆபத்துக்கும், காட்டிக்கொடுப்படுவதற்குமான இடமாக மாறவிருந்தது!*

## ***கர்த்தராகிய இயேசுவின் இறுதி மூன்று ஜெபங்களில் இரண்டாவது ஜெபம் – மன்றாட்டின் ஜெபமாகும் (A Prayer of Pleading).***

*நெருங்கி வந்துகொண்டிருந்த காட்டிக்கொடுப்படுதலும், உலகத்தின் சுமையுமானது, இயேசுவானவரை, ஆதரவையும் ஜெபத்தையும் நாடுவதற்கு உந்தின... அப்படியாகவே அவர் ஜெபிக்கவுஞ்செய்தார், மீண்டும் மீண்டுமாக ஜெபம் செய்தார்...*

***ஆனால் அவரது சிநேகிதர்களோ பலவீனமாக இருந்தார்கள்:***

***மத்தேயு 26:36 – 38: அப்பொழுது, இயேசு அவர்களோடே கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்து, சீஷர்களை நோக்கி:***

***நான் அங்கே போய் ஜெபம்பண்ணுமளவும் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி; பேதுருவையும், செபெதேயுவின் குமாரர் இருவரையும் கூட்டிக்கொண்டுபோய், துக்கமடையவும், வியாகுலப்படவும் தொடங்கினார். அப்பொழுது, அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள் என்று சொல்லி,***

*இயேசுவினுடைய ஆவிக்குரிய உள்ளுணர்வானது, அவரைச் சரீரப்பிரகாரமான பெலத்திற்காகவும், ஜெயங்கொள்ளத் தேவையான ஆவிக்குரிய தைரியத்திற்காகவும் ஜெபிக்க வழிவகுத்தது.*

**செபெதேயுவின் இரு குமாரர்** *– யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர். பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகிய மூவரும்தான்,* **மாற்கு** *5:37 – ஆம் வசனத்தில் யவீருவின் குமாரத்தியை எழுப்பும்போதும்,* **மத்தேயு** *17:1 – ஆம் வசனத்தில் மறுரூப மலையின் தரிசனத்தின்போதும் இயேசுவுடன்கூட இருந்தவர்கள். இம்மூவருக்கும் ஏன் இவ்வளவு உயரிய கனம் கொடுக்கப்பட்டது என்று நமக்குத் தெரியவில்லை. பேதுரு அவர்களனைவர் சார்பாகப் பேசும் ஒரு தொடர்பாளராக இருக்க வேண்டியிருந்தது, ஆனால் அவருடைய தைரியம் அவரைச் சிக்கலில் சிக்க வைத்தபோது, இயேசு அதை ஆவிக்குரிய தைரியமாக மாற்றச்செய்திருந்தார். யாக்கோபும் யோவானும் உண்மையுள்ளவர்களாக இருந்தார்கள், மேலும் பயபக்தியும், அக்கறையும் கூடுதலாகக் காட்டியிருந்திருக்கக்கூடும். இவர்கள் அவரது நெருங்கிய உள் வட்டத்தின் உள் வட்டமாக இருந்தார்கள். சில காரணங்களால், இம்மூவரையும்தான் தாம் மிகவும் சார்ந்திருக்க முடியுமென்பதாக அவர் உணர்ந்திருந்தார்.*

***மத்தேயு 26:39 – 42: சற்று அப்புறம்போய், முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படிசெய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். பின்பு, அவர் சீஷர்களிடத்தில் வந்து,***

***அவர்கள் நித்திரைபண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார். அவர் மறுபடியும் இரண்டாந்தரம் போய்: என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.***



*இந்த ஜெபமானது படிப்படியாக முன்னோக்கி நகர்வதைப் பார்க்கையில் சுவாரஸ்யமாக உள்ளது. ஜெபத்தில், இந்த அனுபவத்தின் பாத்திரம் தம்மைவிட்டு கடந்துபோகும்படிக்கு முதலில் வேண்டிக்கொண்டார். அதாவது,* ***'நீங்கக்கூடுமானால், இந்தப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படிசெய்யும்'*** *என்று வேண்டுகிறார். காரியத்தை அவர் ஏற்றுக்கொண்டாலும், தமக்கிருக்கும் ஐயப்பாட்டினை முன்வைத்தார். அந்த நேரத்தில் தமக்கு இப்பூமியில் மிகவும் அர்ப்பணிப்புடனும் உண்மையாயுமிருந்த தம்முடைய மூன்று சிநேகிதர்கள் எவ்வளவு பலவீனமாக இருக்கிறார்களென்பதையும் அவர் கண்டார். அவர் அடுத்தப்*

*படியை முன்னெடுக்கும் வரையில், அவர்களுக்கும் அவர்களைப் போன்றவர்களுக்கும் உண்மையிலேயே தம்மால் ஒருபோதும் உதவ முடியாது என்பதையும் அவர் உணர்ந்தார். மிகச்சிறிய காரியத்திலேயே அவர்கள் தோல்வியடைவதைப் பார்த்தவுடன் அவரது சிந்தனையில் ஒரு கருத்தோட்டப் பெயர்வு / மாற்றம் (paradigm shift) ஏற்பட்டது போல் உள்ளது. இது அவரை* ***'இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது'*** *என்று கூறவைத்தது. அவர் ஏற்றுக்கொள்ளுதல் எனும் மனப்பான்மையையும் தாண்டி அதனைத் தழுவிக்கொள்ளும் மனப்பான்மைக்கு நகர்ந்திருந்தார், மேலும் அவரது மனப்பான்மையானது விரைவில் முழுமையான நம்பிக்கையுடன் கலக்கவுமிருந்தது.*

CQ Team Comment

***கரினா அவர்களின் கருத்து: சீஷர்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணும்படிக்கு இயேசு அவர்களிடம் கூறியது குறிப்பிடத்தக்கது என்று நான் நினைக்கிறேன். அவர்களோ அதற்கு மாறாக நித்திரைபண்ணிக்கொண்டிருந்தார்கள். இயேசுவோ, சோதனையின்வேளையில் விழித்திருந்து ஜெபித்தார். மரணத்தைக் குறித்தல்லாமல், அவமானம் மற்றும் தேவதூஷணக் குற்றச்சாட்டுகளின் தேவையைக்குறித்த அவருக்கு ஐயப்பாடு எழுந்திருக்கலாமென்று நான் நினைக்கிறேன். பிதாவின் உதவியைக் கேட்டு, தேவனிடம் தமது சொந்த சித்தமல்ல, தேவனுடைய சித்தமே ஆகக்கடவது என்று அவர் ஜெபித்து வேண்டிக்கொண்டதால், அவருக்கு அதீத தேவையிருந்த நேரத்தில், அந்த உதவியும் கிருபையும் அவருக்குக் கிடைத்தது. மாம்சம் பலவீனமாக இருப்பதால், தம்முடையதைக் காட்டிலும் தேவனுடைய சித்தமே நம்பப்பட வேண்டுமென்பதை அவர் அறிந்திருந்தார். ஒருவேளை, பேதுரு விழித்திருந்து ஜெபித்திருந்தால், இயேசுவை மறுதலிக்கும் சோதனையில் விழுந்திருக்காமல் போயிருக்கக்கூடும். மத்தேயு 26:41 – ஆம் வசனத்தில் தாம் பேசினபடி, விழித்திருந்து ஜெபிப்பது, தம்மைப்போல, அப்போஸ்தலருக்கும் எவ்வளவு அவசியமென்பதை இயேசு புரிந்துகொண்டார். அவர்***

***தேவனையே நம்பியிருந்தார் மற்றும் ஜெயம்பெற (ஜெபத்)தொடர்பினைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள வேண்டுமென்பதை அறிந்திருந்தார்.***

*இங்குதான்* ***விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்*** *எனும் அறிவுரை நமக்குக் கிடைக்கின்றது. இத்தொடர்பை நாம் துண்டிக்காமல் தொடர்ந்து தக்கவைக்க முடிந்தால், நம்மைச் சுற்றியுள்ள உலக ஆவிக்குள் நாம் விழுந்துவிட மாட்டோம்.*

*இயேசு தோட்டத்தில் மூன்றுதரம் ஜெபம் செய்தார். அப்போஸ்தலனாகிய பவுலும் தனது* ***மாம்சத்திலிருந்த ஒரு முள்ளை*** *(அநேகமாக அவரது பார்வைக் குறைபாடை) கர்த்தராகிய இயேசுவிடம் மூன்றுதரம் கொண்டுச்சென்றார்.*

***அவருக்குக் கிடைத்த பதில் பின்வருமாறு:***

***2 கொரிந்தியர் 12:9: அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்.***

*தேவ சித்தமிருந்தால் பாத்திரம் தம்மைவிட்டு நீங்கும்படிக்கு இயேசு கேட்டுக்கொண்ட பிரகாரமாகவே இதுவும் இருக்கின்றது. இந்த அனுபவத்தினூடாகக் கடந்துசெல்வதில் மகிமை இருக்கும் என்பதை இயேசு கற்றுக்கொண்டார். அப்போஸ்தலனாகிய பவுல் கெத்செமனே அனுபவத்தின் ஒரு பகுதியாக இருக்கவில்லை, என்றாலும், அதே வழியில் போதிக்கப்பட்டிருந்தார்.*

*ஒவ்வொரு தரமும் இயேசு ஜெபிக்கும்போது, அவரது கவனம் அதிகரித்து வந்தது (more focused), ஏனென்றால் அவர் செய்யும்படிக்கு அனுப்பப்பட்டிருந்த வேலையானது, தம்முடைய ஜீவனுக்கே முற்றிலும் சாதகமற்றிருந்த பகுதிகளிலும்கூட, தேவனுடைய வழிக்கு அடிபணியும்படி கோரினது.* ***'உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது'*** *என்பதே இந்தப் போராட்டத்தின் இறுதி முடிவாக இருந்தது.*

***மத்தேயு 26:43 – 46: அவர் திரும்ப வந்தபோது, அவர்கள் மறுபடியும் நித்திரைபண்ணுகிறதைக் கண்டார்; அவர்களுடைய கண்கள் மிகுந்த நித்திரைமயக்கம் அடைந்திருந்தது. அவர் மறுபடியும் அவர்களை விட்டுப்போய், மூன்றாந்தரமும் அந்த வார்த்தைகளையே சொல்லி ஜெபம்பண்ணினார். பின்பு அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் வந்து: இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்; இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளைவந்தது. என்னைக் காட்டிக்கொடுக்கிறவன், இதோ, வந்துவிட்டான், எழுந்திருங்கள், போவோம் என்றார்.***



*இந்த ஜெபத்திற்குப்பின் உடனே காட்டிக்கொடுக்கப்படுதலானது நிகழ்ந்தது. இடையில் சற்று நேரம்கூட இருக்கவில்லை.*

*பொதுவாக, வேதாகமத்தில் வருகிற ஒரு பாத்திரமென்பது (a cup) ஓர் அனுபவத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. வேதாகமத்தில் பலவிதமான பாத்திரங்கள் குறிப்பிடப்-*



பட்டிருக்கின்றன – **ஆசீர்வாதத்தின் பாத்திரம் *(1 கொரி. 10:16)*, கோபாக்கினையின் பாத்திரம் *(வெளி. 14:10)*, இரட்சிப்பின் பாத்திரம் *(சங். 116:13)*, உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரம் *(வெளி. 16:19)*** கூட உள்ளது – ஆனால் இங்குக் குறிப்பிடப்படுகிற பாத்திரம் எதனைக் குறிக்கின்றது?

பல்வேறு கருத்துகள் இருந்தாலும், இந்தப் பாத்திரம் என்பது தேவனுக்கு எதிரானவர், தம் பிதாவைத் தூஷணஞ்செய்தவர் என்று முத்திரை குத்தப்பட்டதைக் குறிக்கின்றதென்று நாங்கள் நம்புகிறோம். ஆனால், அவரது ஜீவியம் முழுவதும் இதற்கு நேர் எதிர்மாறாகவே – தேவனை மகிமைப்படுத்துவதாகவே இருந்தது!

**இயேசு பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்களை நன்கறிந்திருந்தார்.**

*ஏசாயா 53:3 – 4:* **அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.**

*(ஆதாரம்: ஆல்பர்ட் பார்ன்ஸ் அவர்கள் எழுதிய வேதாகம விளக்கவுரை)* **“நாமோ, அவர் … அடிபட்டார் … என்று எண்ணினோம்”** … இதன் பொதுவான கருத்து என்னவென்றால், அவர் தமது பாவங்களுக்காகவே தேவனால் பெரிய மற்றும் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்பட்டாரென்று அல்லது தெய்வீக ஏற்பின்மைக்குரிய ஒரு பொருளானாரென்று அவர்கள் நினைத்தார்கள். மிகவும் இழிவான மற்றும் அசட்டைபண்ணப்பட்ட நிலைமையில், இவ்வளவு மற்றும் நீண்ட துன்பங்களை அனுபவிக்கின்ற ஒருவர், நிச்சயமாக

*தேவனால் நீதியின்பிரகாரமான பாடுகளுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், மேலும் அவர் தமது சொந்த பாவங்களுக்கான சரியான முடிவையும் பலனையுமே அனுபவித்துக்கொண்டிருந்தார் என்றும் அவர்கள் ஊகித்தார்கள். 'அடிபட்டு' என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை சரியாக "வதைக்கப்பட்டு" அல்லது "நொறுக்கப்பட்டு" என்பதை அர்த்தப்படுத்தும்.*

*வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவர் தேவனால் சபிக்கப்பட்டிருந்தார் என்றும், அவர் தேவனுக்கு எதிராக நின்றதால் தேவனால் தண்டிக்கப்பட்டார் என்றும் குற்றஞ்சுமத்தப்பட்டார். இது அவருக்கு மிகவும் கடினமாக இருந்த அனுபவத்தின் ஒரு பகுதியென்று நாங்கள் நினைக்கிறோம்.*

***மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன். (உபாகமம் 21:23** மற்றும் **கலாத்தியர் 3:13** – ஐப் பார்க்கவும்). இந்த அவமானத்தை (பொதுவெளி அவமானம், பழிகேடு, அவமதிப்பு, பேரிழிவு) கடந்துசெல்வது அவருக்குக் கடினமாக இருந்தது, ஏனென்றால் தேவனே அவருக்கு அனைத்துமாயிருந்தார். அவர் சிருஷ்டிக்கப்பட்ட நாள்துவக்கி பல யுகாயுகங்களுக்கு அவர் செய்த அனைத்தும் தேவனுக்கு மகிமையைக் கொண்டுவருவதற்காகவே செய்யப்பட்டிருந்தன. ஆனால், அவர் அவ்வெண்ணத்தை "நான் உணரும் அனைத்தையும் உங்கள் சித்தமே மேற்கொள்ளட்டுமய்யா" என்று விட்டுவிட்டார்.*

### *மன்றாட்டின் ஜெபம்:*

***பயங்கரமான அனுபவத்தை எதிர்க்கொள்ளும்போது, இயேசு செய்ததைப் போலவே நாமும் செய்ய வேண்டும்: தேவனுடைய பிரசன்னத்தில் நம்முடைய இருதயத்தை ஊற்றி, பலமாக மன்றாடுவோமாக, பின்னர், இறுதியில் தேவனானவர் நாம் என்ன செய்ய விரும்புகிறாரோ அதனை மனமுவந்து ஏற்றுத் தழுவிக்கொள்வோமாக.***

### இப்படிப்பட்ட மன்றாட்டின் ஜெபத்திற்குப் பிறகு, தேவன் அனுமதிக்கும் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள இயேசு முற்றிலும் ஆயத்தமாக இருந்தாரென்பதை நாம் எப்படி அறிந்துகொள்வது? வாருங்கள் பார்க்கலாம்!

படிப்படியாக வெளிப்படவிருந்த சித்திரவதை, சிலுவையிலறையப்படுதல் மற்றும் நிந்தனை ஆகியவற்றைச் சகித்துக்கொள்வதற்கு இயேசு எவ்வளவு முழுமையாகத் தயாராயிருந்தார் என்பதை வேத வாக்கியங்கள் நுட்பமான வழிகளில் நமக்குக் காட்டுகின்றன. அவருடைய கடைசி மூன்று ஜெபங்களைப் பற்றி நாம் ஆராய்கையில், அவர் ஜெபிக்காத ஜெபத்தின்மீது இப்போது கவனம் செலுத்த விரும்புகிறோம். இந்த ஜெபம் அவரது குணாதிசயம் மற்றும் தீர்மானத்தைப் போலவே முக்கியமானதாக இருக்கின்றது.

*Unknown History, BitmapAxis* எனும் யூடியூப் சேனலில், விட்டோல்ட் பிலெக்ஸ்கி என்பவர் பற்றிய *'Pilecki's end, Witold Pilecki – Unsung Hero of WWII'* எனும் பதிவிலிருந்து எடுக்கப்பட்ட தகவல் பின்வருமாறு:

- *அவர் 1944இல் வார்சா கிளர்ச்சியில் போராடினார். அதன் தோல்விக்குப் பிறகு, அவர் ஜெர்மானியரிடம் சரணடைந்தார், பின்னர் அவர் ஜெர்மனியிலுள்ள முர்னாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்; அங்கு அவர் ஏப்ரல் 1945இல் அமெரிக்க இராணுவத்தால் போர்க்கைதிகள் முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டார். இரண்டாம் போலந்துப் படையின் தளபதியான ஜெனரல் ஆண்டர்ஸ் என்பவர், அப்போது சோவியத் கட்டுப்பாட்டிலுள்ள போலந்திற்குத் திரும்பச்சொல்லி, நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டிருந்த போலந்து அரசாங்கத்திற்கு உளவுத் தகவல்களைச் சேகரிக்கும்படி பிலெக்ஸ்கிக்குக் கட்டளையிட்டிருந்தார். மே 5, 1947இல் கம்யூனிஸ்டுகளால் பிலெக்ஸ்கி கைதுசெய்யப்பட்டார். அவர் சித்திரவதை செய்யப்பட்டார், அவரது விலா எலும்புகளும் மூக்கும் உடைக்கப்பட்டு, விரல் நகங்கள் பிடுங்கப்பட்டன. அவர் தேசவிரோதமான செயல்களில் ஈடுபட்டதாகக்*

*குற்றஞ்சாட்டப்பட்டு, மற்றவர்களுடன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அவர் ஒரு கைப்பாவையான நீதிமன்றத்தால் மரணத்தண்டனை விதிக்கப்பட்டு, மே 1948இல் கொல்லப்பட்டார்.*

*அவர் அவுஷ்விட்சிலிருந்து தப்பித்து, கம்யூனிஸ்ட் போலந்தால் கொல்லப்பட்டார்.*

***நான் என் வாழ்க்கையை வாழ முயற்சிக்கிறேன், அதனால் என் மரணத்தருவாயில் நான் பயத்தைக்காட்டிலும் மகிழ்ச்சியை உணர விரும்புகிறேன்.***

*- விட்டோல்ட் பிலெக்ஸ்கி,*

*அவரது மரணத்தண்டனை அறிவிக்கப்பட்ட பிறகு கூறியது*

*இது, மரணத்தருவாயில் பயத்தினை அல்லாமல் மகிழ்ச்சியை உணர முடிந்த இயேசுவையே நமக்கு நினைப்பூட்டுகின்றது.*

***பந்தங்களோடும் தீவட்டிகளோடும் ஆயுதங்களோடும் ஒரு கூட்டம் அவ்விடத்திற்கு வந்தது. இக்கூட்டம் ஆயுதங்களில்லாத ஒரு மனிதனால், அதாவது ஆயுதங்களில்லாத பழக்கமான மனிதனால் வழிநடத்தப்பட்டு அங்கு வந்தது:***

***மத்தேயு 26:49 – 50: உடனே, அவன் இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, வாழ்க என்று சொல்லி, அவரை முத்தஞ்செய்தான். இயேசு அவனை நோக்கி: சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிறாய் …***

***லூக்கா 22:48: … யூதாசே, முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக்கொடுக்கிறாய் … என்றார்.***

*இயேசு அப்படிப்பட்ட செயலைக் கண்டு அஞ்சி பின்வாங்கவில்லை; அவர் எதிர்ப்பின்றி இணங்கிப்போனார்.*



*இயேசு அடுத்ததாக தாம் எவர்களுக்காக அதிக நேரம் ஜெபித்தாரோ போதித்திருந்தாரோ அவர்கள்மீது கவனம் செலுத்தினார்:*

***யோவான் 18:3 – 5, 8: யூதாஸ் போர்ச்சேவகரின் கூட்டத்தையும் பிரதான ஆசாரியர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு, பந்தங்களோடும் தீவட்டிகளோடும் ஆயுதங்களோடும் அவ்விடத்திற்கு வந்தான். இயேசு ... அவர்களை நோக்கி: யாரைத் தேடுகிறீர்கள் என்றார். அவருக்கு அவர்கள் பிரதியுத்தரமாக: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். ... இயேசு பிரதியுத்தரமாக: நான்தானென்று உங்களுக்குச் சொன்னேனே; என்னைத் தேடுகிறதுண்டானால், இவர்களைப் போகவிடுங்கள் என்றார்.***

*துரோகம் என்பது இவ்வாறாகத்தான் காணப்படுகிறது – பந்தங்களோடும் தீவட்டிகளோடும் ஆயுதங்களோடும் பிரதான ஆசாரியர் பரிசேயர் என்பவர்களால் ஒரு கூட்டம் அனுப்பப்பட்டது, அதுவும் ஒரு வாளையோ ஈட்டியையோகூட பயன்படுத்தாது, தம் ஜீவியம் முழுவதும் குணப்படுத்தவும், போதிக்கவும், எல்லோரையும் ஊக்குவிப்பதுமாக இருந்த ஒரு மனிதனைப் பிடிக்க அனுப்பப்பட்டிருந்தார்கள்.*



***எல்லாவற்றிற்கும் மேலாக, தான் இயேசுவுடன் கூட இருப்பேன் என்று அவரிடமே கூறியிருந்த பேதுரு உடனே செயலில் இறங்கினார்:***

***யோவான் 18:10 – 11: அப்பொழுது சீமோன்பேதுரு, தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான்; அந்த வேலைக்காரனுக்கு மல்குஸ் என்று பெயர். அப்பொழுது இயேசு பேதுருவை நோக்கி: உன் பட்டயத்தை உறையிலே போடு; பிதா***

***எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ என்றார்.***

*இயேசுவின் பதில் மூன்று மடங்காக இருந்தது.*

***1. முதலாவதாக, அவர் வன்முறையை நிறுத்தி, தேவனுடைய மேற்பார்வையின் மீதான தமது விசுவாசத்தினை அறிவிக்கின்றார்.***

***2. இரண்டாவதாக, அவர் தமது பிதாவால் எவ்வளவு எளிதில் பாதுகாக்கப்பட்டிருக்கலாம் மற்றும் காப்பாற்றப்பட்டிருக்கலாம் என்பதை அவர் வெளிப்படுத்துகிறார். அவர் ஏறெடுக்காத ஜெபம் இதுதான், நம்முடைய பயத்தைக்காட்டிலும் கீழ்ப்படிதல் பெரியது என்பதை இயேசு நமக்குக் காட்டுக்கின்றார்.***

**"ஒருபோதும் ஏறெடுக்கப்படாத ஜெபம்:"**

***மத்தேயு 26:53: நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?***

*அதாவது 72,000க்கும் அதிகமான தூதர்கள்! 72,000 என்பது எத்தனை? என்று பார்க்கலாம். நியூ இங்கிலாந்து பேட்ரியாட்ஸ் மற்றும் லாஸ் ஏஞ்சல்ஸ் ராம்ஸ் இடையேயான 2019ஆம் ஆண்டின் சூப்பர்போல் (Superbowl) எனும் காற்பந்தாட்டமானது மினசோட்டாவின் மினியாபோலிஸில் உள்ள யு.எஸ்.பேங்க் ஸ்டேடியத்தில் நடைப்பெற்றது. அந்த மைதானத்தில் 66,000 பேருக்குச் சற்று அதிகமானோர் மாத்திரமே இருக்க முடியும்;*



*இது ஒரு NFL அரங்கத்தின் சராசரி அளவாகும் – சிலது குறைவாகவும், சிலது அதிகமாகவும் பிடிக்கும். அந்தச் சிறிய மைதானத்தைச் சுற்றியிருந்த ஜனங்கள் அனைவருடனும் அந்தக் கால்பந்து விளையாட்டானது எப்படி இருந்திருக்குமென்பதைச் சற்று கற்பனை செய்துபாருங்கள். அப்படியே இப்போது இயேசு மற்றும் பேதுருவுடன் அந்தக் காட்சியை நினைத்துப்பாருங்கள். என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க "ஆவிக்குரிய விளக்கைச்" சொடுக்கிவிட்டுப் (switch on the spiritual lights) பார்த்தால், 72,000க்கும் மேற்பட்ட தேவதூதர்கள் தங்கள் நண்பரான இயேசுவைச் சூழ்ந்துகொண்டு, அவரைக் காப்பாற்ற பரமபிதாவின் "செயல்படுங்கள்!" (Go!) என்றக் கட்டளைக்காகக் காத்திருப்பதாகக் கற்பனை செய்ய முடிகின்றது. அவர்கள் உச்சபட்ச எச்சரிக்கையுடன், விழிப்பாய்ப் பார்த்துக்கொண்டு காத்திருந்திருப்பார்கள். அங்கு நிலவிய பதற்றம் நம்பமுடியாதவகையில் இருந்திருக்கும்! ஒரு தூதன் போதும் அனைத்து வீரர்களையும் முறியடித்திருக்க முடியும். இவர்களில் ஒருவரல்ல, 10 அல்ல, 10,000 அல்ல, 72,000க்கும் அதிகமானவர்கள் அழிக்கக்கூடிய சக்திகளைக் கொண்டிருப்பது நம்பமுடியாத ஒன்றாகும்!*

*இது இயேசுவின் மாபெரும் கட்டுப்பாட்டையும், பெரிய காரணத்திற்காக தமது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் திறனையும் காட்டியது. இது நாம் கோபமாக இருக்கும்போதும், வசைபாட விரும்பும்போதும் சிந்திக்க வேண்டிய விஷயமாகும். நாம் ஏமாற்றப்படும்போதோ அல்லது நம்மிடம் பொய்சொல்லப்படும்போதோ அல்லது நாம் அவமதிக்கப்படும்-போதோ, நமக்குப் பழிவாங்க வேண்டுமென்று தோன்றும். இயேசுவிடம் அப்பேர்ப்பட்ட உயர்ந்த சிந்தனாசக்தியும், அறிவும், வல்லமையும் இருந்தது, … என்றாலும், அவர் ஒருபோதும் பழிவாங்கவில்லை. அவர் எப்போதும் நிதானத்தையே கடைப்பிடித்தார்.*

*இதனை அவர் ஜெபத்தில் வேண்டியிருந்திருக்கலாம், ஆனால் அவ்வாறு அவர் செய்யவில்லை. சில சமயங்களில் தேவனுடைய சித்தமல்லாத விடுதலைக்கான வாய்ப்பு நமக்குக்*

கிடைக்கலாம். ஆனாலும், அநேகமாக, நம்முடைய மாபெரும் நன்மைக்காக ஒரு சோதனையினூடே நாம் நடந்துசெல்ல வேண்டுமென்பதே கர்த்தருடைய விருப்பமாக இருக்கக்கூடும்.



இயேசுவால்கூட தூதர்களுக்கு நேரடியாகக் கட்டளையிட முடியவில்லை என்பதைக் கவனியுங்கள் – அதைச் செய்யும்படி அவர் தேவனிடம் வேண்டுதல்செய்ய வேண்டியிருந்தது. சில ஜனங்கள், தூதர்களிடம் ஜெபிப்பதைப் பற்றி அல்லது தங்கள் சார்பாக தூதர்கள் காரியங்களைச் செய்ய வேண்டுவதைப் பற்றி நாம் கேள்விப்படும்போது, மேற்சொன்னதை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்கலாம். இது நாம் அறிந்திருக்காத ஆவிக்குரிய மண்டலத்தைப் பற்றிய ஒரு சிறிய விவரமாகும், ஆனால் இதனை வேண்டி "ஒருபோதும் ஜெபம் ஏறெடுக்கப்படவில்லை." நம்மால் பார்க்க முடியாத மாபெரும் வல்லமைகள் இருக்கின்றன, தேவன் தேவையென்று கண்டால், அந்தச் சக்திகள் போராடத் தயாராக இருக்கிறார்கள் என்பதை அவர் தம்முடைய பின்னடியார்களுக்குத் தெரியப்படுத்தினார்.

***3. மூன்றாவதாக, இயேசு தமக்கு எதிராக வந்தவரைச் சொஸ்தப்படுத்தினார், ஏனென்றால் அந்த மல்குஸ் என்பவரும் மற்றொரு பாவமுள்ள மனிதனாக இருந்தார், அவருக்காகவும்தானே அவர் மரிக்கவிருந்தார்.***

***லூக்கா 22:51–53: … இம்மட்டில் நிறுத்துங்கள் என்று சொல்லி, அவனுடைய காதைத்தொட்டு, அவனைச் சொஸ்தப்படுத்தினார். பின்பு இயேசு தமக்கு விரோதமாய் வந்த பிரதான ஆசாரியர்களையும் தேவாலயத்துச் சேனைத்தலைவர்களையும் மூப்பர்களையும் நோக்கி: ஒரு கள்ளனைப் பிடிக்கப் புறப்பட்டு வருகிறதுபோல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துப் புறப்பட்டுவந்தீர்களே. நான் தினந்தோறும் தேவாலயத்தில்***

***உங்களுடனேகூட இருக்கையில் நீங்கள் என்னைப் பிடிக்கக் கைநீட்டவில்லை; இதுவோ உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது என்றார்.***

*தேவ திட்டமே படிப்படியாக வெளிப்பட்டு வருகிறது என்பதையும், அதைத் தடுக்க அவர்களுக்கு எந்த வல்லமையுமில்லை என்பதையும் இயேசு உறுதிப்படுத்தினார்.*

***அந்தகாரத்தின் அதிகாரம்*** *– ... சாத்தானின் அதிகாரம்; அந்தகாரத்தில் சாத்தான் செழித்தோங்குவான்.*

***மத்தேயு 26:56: ஆகிலும் தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கிற வசனங்கள் நிறைவேறும்படி இவைகளெல்லாம் சம்பவிக்கிறது ...***

*அப்போது சீஷர்களனைவரும் அவரை விட்டு ஓடிவிட்டனர்.*

***இயேசுவானவர், உடனடியாகக் கிடைக்கக்கூடிய மாபெரிய விடுதலைக்காக வேண்டாமலிருந்ததன்மூலம், பெரும்பாலும் தேவனுடைய சித்தமானது கடினமான பாதையை எடுக்குமென்றும், ஆனால் அப்பாதை கிருபை, பெலம், ஜெயங்கொள்ளுதல் மற்றும் மீட்பு ஆகியவற்றுக்கே வழிவகுக்கும் என்றும் அவர் நமக்குப் போதிக்கின்றார்.***

***இவ்வளவு நேரம் ஆயத்தம் மற்றும் மன்றாட்டின் ஜெபங்கள் மற்றும் தேவ மேற்பார்வையின் மீதான பேசப்படாத விசுவாசம் குறித்துப் பார்த்தோம். இறுதியாக, இயேசுவின் இறுதி ஜெபத்தைக்குறித்து நாம் எங்கே காணலாம்? என்பதைக் குறித்துப் பார்க்கவுள்ளோம்!***

*சந்தேகத்திற்கிடமின்றி, இயேசு சோதனையின் இரவு முழுவதும் ஜெபித்திருந்திருப்பார், ஆனால் இவை எதுவும் நாம் வாசிப்பதற்கு எழுதப்படவில்லை. இயேசுவின் இறுதி ஜெபமானது அவருடைய மரணத்திற்குமுன் அவரது கடைசி*

*வார்த்தைகளில் உச்சரிக்கப்பட்டது. அவர் ஆறு மணிநேரம் சிலுவையில் தொங்கினார், அவருடைய பாடு மற்றும் அவமானத்தின் முடிவானது இறுதியில் வந்தது.* ***22ஆம் சங்கீதம்*** *அவரது கடைசி வார்த்தைகளாக இருந்தன.*

***The Skit Guys எனும் தளத்தில் 'Last Words of Christ: James the Lesser' எனும் தலைப்பில், சின்ன யாக்கோபு பற்றிய பதிவிலிருந்து எடுக்கப்பட்டது:***

- *என் பெயர் யாக்கோபு, நானும் சீஷர்களில் ஒருவன், ஆனால் நீங்கள் நினைப்பவரல்ல. நான் மற்றொரு யாக்கோபு. சின்ன யாக்கோபு. எங்கள் இருவரையும் வேறுபடுத்திக் காட்ட சீஷர்கள் என்னை அப்படித்தான் அழைப்பார்கள். பல ஆண்டுகளாக, நானும் என்னை அவ்வாறே அழைக்க ஆரம்பித்திருந்தேன். அப்படித்தான் என்னை நினைத்தும்கொண்டேன். நான்தான் கடைசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சீஷன். நான் ஒருபோதும் சிறந்தவனாக இருந்ததில்லை, ஆனால் அது எதுவும் இப்போது முக்கியமில்லை. ஏனென்றால் இயேசுவை ஒரு கல்லறையில் வைத்து மூடிவிட்டனர், ஆனால் அவரோ மூன்று நாட்களுக்குப் பிறகு உயிரோடெழுந்து நிலைமையைத் தலைகீழாக்கியிருந்தார்.*

*நாம், சிலுவையிலறையப்பட்ட நேரத்தை நோக்கி வேகமாக முன்னோக்கிச் செல்லலாம். இங்கே, இயேசு தமது பயணத்தின் முடிவிலிருந்தார், அவரது சிந்தையோ* ***22ஆம் சங்கீதத்தில்*** *தம்மைப்பற்றிய தீர்க்கதரிசனங்களைச் சிந்தித்துக்கொண்டிருந்தது. இறுதியில் அவர் தமது பிதாவிடம் நேரடியாகப் பேசுவதால், இதை ஒரு ஜெபமாகப் பார்க்கிறோம்.*

## *கர்த்தராகிய இயேசுவின் இறுதி மூன்று ஜெபங்களில் மூன்றாவது ஜெபமானது இடைவிடாத / விடாமுயற்சியின் ஜெபமாகத் துவங்குகின்றது – A Prayer of Perseverance.*

***மாற்கு 15:33 – 34: ஆறாம்மணி நேரமுதல் ஒன்பதாம்மணி நேரம்வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. ஒன்பதாம்மணி நேரத்திலே, இயேசு: எலோயீ! எலோயீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு: என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.***

***சங்கீதம் 22:1: என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவி செய்யாமலும், நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்?***

***என் தேவனே, என் தேவனே*** – *சொல்லர்த்தமாக, "வல்லவரே, வல்லவரே" என்பது அர்த்தமாகும். வேறெந்த நேரத்திலும், இயேசு தேவனை 'தேவன்' என்று அழைத்ததில்லை, மாறாக, எப்போதும் பிதா என்றே அழைத்திருந்தார். இது நம் அனைவருக்காகவும் இயேசு அனுபவித்த பாடினுடைய இறுதிக் கட்டமாக இருந்தது. தேவனானவர் தம்முடைய முகத்தைத் திருப்பும்போது ஏற்படும் "அந்தகாரத்தை" அவரும் அனுபவிக்க வேண்டியிருந்தது.*

*இது அவருக்கும் அவருடைய பிதாவுக்கும் ஏறப்பட்ட பிரிவினிமித்தம் ஏற்பட்ட வியாகுலத்தின் வேண்டுகோளாக இருந்தது. ஆறாம்மணி நேரத்தில் (நண்பகல் 12 மணி), அந்தகாரம் சூழ்ந்தபோது, தேவன் தம்முடைய முகத்தைத் திருப்பினார் என்கிற முடிவுக்கு வருவது நியாயமானதாக இருக்கும்; அந்த அந்தகாரம் மூன்றுமணி நேரம் தங்கியிருந்தது.*

*சங்கீதம் 22:2: என் தேவனே, நான் பகலிலே கூப்பிடுகிறேன், உத்தரவுகொடீர்; இரவிலே கூப்பிடுகிறேன், எனக்கு அமைதலில்லை.*

- ***யூதருடைய 24 – மணி நேர நாளென்பது, ஒரு சூரிய அஸ்தமனத்திலிருந்து அடுத்த சூரிய அஸ்தமனம் வரையாகும்.***
- ***“நாள்” என்பது காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையாகும், எனவே காலை 6 மணி என்பது “முதலாம் மணிநேரம்” ஆகும்.***
- ***இயேசு 3ஆம் மணி, அதாவது, காலை 9 மணிக்குச் சிலுவையிலறையப்பட்டார்.***
- ***6ஆம் மணி நேரத்தில், நண்பகலில், அந்தகாரம் உண்டாயிற்று, அவர் மரித்த நேரமான, “ஒன்பதாம் மணிநேரம்,” அதாவது, பிற்பகல் 3 மணி வரை அது நீடித்தது.***
- ***மொத்தம் 6 மணி நேரம் அவர் சிலுவையில் இருந்திருக்கிறார்.***

*அவர் மொத்தம் ஆறுமணி நேரம் சிலுவையிலிருந்தார் என்பதன் மூலம் இது நிறைவேறுகிறது; மூன்றுமணி நேரம் பகலிலிருந்தது, மூன்றுமணி நேரம் இருளிலிருந்தது.*

### *பின்னர், இயேசுவின் ஜெபம் சமாதானத்தின் ஜெபமாக மாறியது:*

***யோவான் 19:28: அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக: தாகமாயிருக்கிறேன் என்றார். …***

***மாற்கு 15:35: அங்கே நின்றவர்களில் சிலர் அதைக் கேட்டபொழுது: இதோ, எலியாவைக் கூப்பிடுகிறான் என்றார்கள். …***

***யோவான் 19:30 மற்றும் லூக்கா 23:46: இயேசு காடியை***

**வாங்கினபின்பு, முடிந்தது ... பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று... சொல்லி, ஜீவனைவிட்டார்.**

### *இயேசு மரிக்கும் போது உண்டான அந்தகாரம் எதனால் ஏற்பட்டது?*




- *இது ஒரு சூரிய கிரகணமாக இருக்க முடியாது, ஏனெனில் அவை ஓர் அமாவாசையில் மாத்திரமே நிகழுபவையாகும், அங்கு சந்திரன் ஒரு தேய்ப்பிறையாக மாத்திரமே இருக்கும். பஸ்கா எப்போதும் பௌர்ணமியில் ஆசரிக்கப்படும். சூரிய கிரகணம் சில நிமிடங்கள் மாத்திரமே நீடிக்கும். உண்மையில், ஆயிரக்கணக்கான ஆண்டுகளில், ஜூலை 16, 2186 அன்று மிக நீண்ட சூரிய கிரகணம் நிகழப்போகிறதென்று விஞ்ஞானிகள் ஏற்கனவே அறிந்திருக்கிறார்கள். இது 7 நிமிடங்கள் மற்றும் 29 வினாடிகள் மாத்திரம் நீடிக்கவுள்ளதாம். (ஆக, அதிகபட்ச கால அளவு 7 நிமிடங்கள் மற்றும் 31.1 வினாடிகள் மாத்திரமே ஆகும்.)*

- *பௌர்ணமியில் மாத்திரம் நிகழ முடிகின்றதும் மற்றும் பல மணிநேரங்கள் நீடிக்கின்றதாயுமிருந்தாலும், இது சந்திர கிரகணமாக இருக்க முடியாது. அவை இரவில் மாத்திரமே நிகழும், நண்பகல் வேளையில் ஒருபோதும் நிகழாது, அது சந்திரனைச் சிவப்பாகக் காட்டும்.*

- *ஒருவேளை அது புயல் மேகங்களாக இருந்திருக்குமா? எரிமலை வெடிப்பின் விளைவாக இருந்திருக்குமா? தெரியவில்லை! இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒன்று அங்கு நடந்துள்ளது.*

***மனிதனுடைய வரலாறு பல இருண்ட யுகங்களைக் கண்டுள்ளது, ஆனால் உலகின் உண்மையான ஒரேயொரு குற்றமற்ற மனிதர் கொல்லப்பட்டவேளையானது மிகவும் அந்தகாரமான வேளையாக இருந்தது.***

***யோவான் 9:5: நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்...***

*அவர் மரித்துக்கொண்டிருக்கும்போது ஒளியும் குன்றிவந்தது பொருத்தமாக உள்ளது. அவரது மரணத்தில் அந்தகாரம் துல்லியமாக முடிவுக்கு வந்தது. பின்னர் மீண்டும் ஒளி வந்ததென்பது ஒரு நம்பிக்கையின் செய்தியாக இருந்தது.* ***(உரோமர் 5:2, 9 – 11)***

*ஒருவேளை அந்தகாரமென்பது, சிலுவையிலறையப்-படுவதைக் கண்டதில் தேவன் தாமடைந்த வலியை வெளிப்படுத்தும் அவருடைய வழியாகக்கூட இருந்திருக்கலாம்.*

***இந்தச் சங்கீதத்தின் கடைசி வசனம் பின்வருமாறு:***

***சங்கீதம் 22:31: அவர்கள் வந்து: அவரே இவைகளைச் செய்தார் என்று பிறக்கப்போகிற ஜனங்களுக்கு அவருடைய நீதியை அறிவிப்பார்கள்.***

*(ஆதாரம்: சார்லஸ் ஸ்பர்ஜன்) அவரே இதைச் செய்தார், அல்லது, "முடிந்தது." இரட்சிப்பின் மகத்தான வேலை முடிந்தது, பூமியில் சமாதானமும், உன்னதத்தில் மகிமையும் உண்டானது. "முடிந்தது," இது கர்த்தராகிய இயேசுவின் கடைசி வார்த்தையும், அதேபோல இந்தச் சங்கீதத்தினுடைய கடைசி வார்த்தைக்கொத்ததாகும்.*

***22ஆம் சங்கீதத்தின்*** *முதல் மற்றும் கடைசி வசனப்பகுதிகளை இயேசு வாய்மொழியாக வெளிப்படுத்தினார்.*

*சர்வவல்லமையுள்ள தேவனுடைய கரங்களில் காரியத்தை முழுமையாக ஒப்படைத்துவிடுவதைக்காட்டிலும் மாபெரும் சமாதானம் வேறிருக்காது அன்பர்களே!*

***வானத்தில் இருள் சூழ்ந்தது. பூமி அதிர்ந்தது. திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது.***
***அவரது சப்தமோ மௌனமாகியிருந்தது. அதனைக் கேட்கமுடியாதவாறு இருந்தது.***
***அவரது மூச்சு நின்றுபோனதினால், அக்குரல் இப்போது இல்லாது போயிருந்தது.***
***மேலும் ஆதி துவக்கி முதன்முறையாக, சர்வவல்லவரின் சகல சிருஷ்டிப்புகளோ தங்களுடைய இசைவின் பிரதான சப்தமில்லாமல் இருந்தன.***
***அவருடைய இடத்தில் ஒரு வெறுமையான நிசப்தமே நிலவியது. பிரபஞ்சத்தின் பரந்த எல்லைகள் அனைத்திலுமே அப்படியொரு வெறுமையான நிசப்தம் காணப்பட்ட ஒரு நேரமோ இடமோ முன் ஒருபோதும் இருந்ததில்லையே.***
***இது அவசியமானதென்றாலும், இது ஒரு காலத்திற்கு மாத்திரமே, ஏனெனில் சர்வவல்லவர் இன்னும் செயல்படுவதை நிறுத்தியிருக்கவில்லையே!***
***– ரிக் அவர்கள், His Voice எனும் மற்றொரு பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்டது***

## ***இடைவிடாத மற்றும் சமாதானம் கிட்டும் ஜெபம்:***

***சிலுவையில் இயேசு ஏறெடுத்த ஜெபத்தை முன்மாதிரியாக எப்போதும் நினைவில் கொள்வோமாக. மனுக்குலத்தினுடைய பாவத்தின் முழு அளவையும் சுமப்பதற்கான பெலன் வேண்டி ஏறெடுக்கப்பட்ட அவரது ஜெபமானது, பலியினுடைய அமளியான பாதையின் முடிவில் சமாதானம் பிரகடனப்படுத்திய 22 – ஆம் சங்கீதத்தின் முடிவுக்கு அவரை இட்டுச் சென்றது.***

***The Skit Guys எனும் தளத்தில் 'Last Words of Christ: James the Lesser' எனும் தலைப்பில், 'Less is more' என்பது பற்றிய பதிவிலிருந்து எடுக்கப்பட்டது:***

- *முடிந்துவிட்டது என்று நாங்கள் நினைத்தோம். இவை அனைத்தும் முடிந்துவிட்டதாக நாங்கள் நினைத்தோம். ஆனால் அதற்குப் பதிலாக, அவர் மரணத்தை ஜெயித்திருந்தார். அவர் செய்துவிட்டார். அவர் செய்துவிட்டார்! நான் என்னைப் பார்க்கும்போது, நான் ஓர் ஏமாற்றமென்பதைப் பார்க்கிறேன். என்னுடைய தகுதியின்மையைப் பார்க்கிறேன்; நான் சின்னவன் (குறைப்பாடுள்ளவன்) என்பதைப் பார்க்கிறேன். என்னை எல்லோரும் எளிதில் மறந்துவிடுவரென்பதை நான் உணர்கிறேன். ஆனால், பின்னர் எனக்கு, அவர் அதை செய்துவிட்டாரென்பது நினைவுக்கு வந்தது. அவர் மரணத்தை ஜெயித்தார். எனக்காகச் (எனக்காகவும்) செய்திருந்தார். சிலுவையின் காரணமாக, கிறிஸ்துவின் காரணமாக, நான் மீட்கப்பட்டேன், மீண்டுமாகக்கூட பிறந்துள்ளேன். அவர் என் பாவத்திலிருந்து என்னை விடுவித்தார். அவர் என்னை என்னிடமிருந்து விடுவித்துள்ளார், மேலும் என்னுள் அவரை அதிகமாக வைத்திருக்க முடியும் என்றால், என்னுள் என்னைக் குறைவாக வைத்திருப்பதை நான் பொருட்படுத்தமாட்டேன் (அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்).*

*இயேசுவின் ஜெபங்கள் மற்றும் உண்மைத்தன்மையின் இறுதி முடிவோ அனைவருக்கும் ஒரு புதிய துவக்கமாக இருந்தது!*

### ***கல்லறையினிடத்திலிருந்த ஸ்திரீகள்:***

***மாற்கு 16:2 – 6: … வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே சூரியன் உதயமாகிறபோது கல்லறையினிடத்தில் வந்து, கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித்தள்ளுவான் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். அந்தக் கல் மிகவும் பெரிதாயிருந்தது; அவர்கள் ஏறிட்டுப்பார்க்கிறபோது, அது தள்ளப்பட்டிருக்கக் கண்டார்கள். அவர்கள் கல்லறைக்குள் பிரவேசித்து,***

***வெள்ளையங்கி தரித்தவனாய் வலதுபக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு வாலிபனைக் கண்டு பயந்தார்கள். அவன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள், சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள்;***



***லூக்கா 24:5 – 8: … உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார். இதோ, அவரை வைத்த இடம். மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம்நாளில் எழுந்திருக்கவும் வேண்டுமென்பதாக அவர் கலிலேயாவிலிருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவுகூருங்கள் என்றார்கள். அப்பொழுது அவர்கள் அவருடைய வார்த்தைகளை நினைவுகூர்ந்து, …***

*தேவனுடைய சித்தத்திற்கும், அவருடைய வழிக்கும் உண்மையாக இருந்ததால் உயிர்த்தெழுதல் நிகழ்ந்தது. அவருடைய ஜெபமே இங்குவரை அவரைக் கொண்டு வந்திருந்தது. அவர் தேவையான தெரிவுகளைச் சரியாகத்*

*தேர்ந்தெடுத்திருந்தார்; அவர் (இப்போதும்) ஜீவித்துக்-கொண்டிருப்பதால், நாமும் ஜீவிக்க முடியும் அன்பானவர்களே!*

*இயேசு எதற்காக ஜெபித்தார், எதற்காக ஜெபிக்கவில்லை என்பதைப் பார்க்கையில் ஆச்சரியமாக இருக்கிறது. தம்மை விடுவித்துக்கொள்ள அவருக்கு வாய்ப்பிருந்தது, அதனை அவர் பயன்படுத்தியிருக்கலாம், ஆனால் (ஈடுபலிக்காகப்) பயன்படுத்தியிருக்கக் கூடாதிருந்தது... அவ்வாறே அவர் அதைப் பயன்படுத்தவுமில்லை! அதற்காக நாம் தாழ்மையாக ஸ்தோத்தரிக்கிறோம்!*

*நாம் அனைவருமே தவறி விழுகிறவர்களாக இருக்கிறோம், ஆனாலும் அவருடைய உண்மைத்தன்மையானது, மீண்டும் எழுந்து, சரியானதற்கும் உண்மையானதற்கும் நிற்க நமக்குக் கிருபை அளிக்கின்றது பிரியமானவர்களே!*

## கூடுதலான தகவல்கள்

*(ஆதாரம்: Wikipedia / விக்கிபீடியா)*

*விட்டோல்ட் பிலெக்ஸ்கி என்பவர் (13 மே 1901 – 25 மே 1948; இரகசியபெயர்கள்: ரோமன் ஜெசியர்ஸ்கி, டோமாஸ் செராஃபின்ஸ்கி, ட்ரூ, விட்டோல்ட்) போலந்து குதிரைப்படையின் அதிகாரியாகவும், உளவுத்துறை முகவராகவும் மற்றும் எதிர்ப்பார்களின் தலைவராகவும் இருந்தவர். அவர் போலந்து-சோவியத் போர், இரண்டாம் போலந்து குடியரசு போர் மற்றும் இரண்டாம் உலகப் போர் ஆகியவற்றில் போலந்து இராணுவத்தின் ரோட்மிஸ்ட்ர்ஸ் (தளபதி) ஆக பணியாற்றினார். அவர் ஜெர்மன் ஆக்கிரமிக்கப்பட்ட போலந்தில் ஓர் எதிர்ப்புக் குழுவான Secret Polish Army – யின் (தஜ்னா ஆர்மியா போல்ஸ்கா) துணைநிறுவனராகவும் இருந்தார், பின்னர் underground Home Army – யின் (ஆர்மியா க்ரஜோவா) ஓர் உறுப்பினராகவும் இருந்தார். அவுஷ்விட்ஸ் வதை முகாம் மற்றும் பெரும் இன அழிப்பு (Holocaust) பற்றிய முதல் விரிவான, நேச நாடுகளின் உளவுத்துறை அறிக்கையான விட்டோல்டின் அறிக்கையினை எழுதியவர். அவர் ஓர் உரோம கத்தோலிக்கராக இருந்தார்.*

*இரண்டாம் உலகப் போரின்போது, உளவுத் தகவல்களைச் சேகரித்துவிட்டு, பின்னர் தப்பிப்பதற்காக அவுஷ்விட்ஸ் வதை முகாமில் சிறையில் அடைக்கப்படுதல் எனும் போலந்து எதிர்ப்பார்களின் திட்டத்திற்கு பிலெக்ஸ்கி தானாக முன்வந்தார். முகாமில் இருந்தபோது, அவர் ஓர் எதிர்ப்பு இயக்கத்தை ஏற்பாடு செய்து, நாசி ஜெர்மனியின் அவுஷ்விட்ஸ் அட்டூழியங்களை மேற்கத்திய நட்பு நாடுகளுக்கு 1941 – ஆம் ஆண்டிலேயே தெரிவித்தார். ஏறக்குறைய 2½ ஆண்டுகள் சிறைவாசத்திற்குப் பிறகு, 1943 – இல் அவர் முகாமிலிருந்து தப்பினார். அவர் ஆகஸ்ட் – அக்டோபர் 1944 – இல் வார்சா கிளர்ச்சியில் ஒரு போராளியாக பங்கேற்றார். போலந்தை கம்யூனிஸ்ட் கைப்பற்றிய பிறகு, நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டு, லண்டனை தளமாகக் கொண்ட போலந்து அரசாங்கத்திற்கு விசுவாசமாக இருந்தார். அவர் 1947 – இல் உளவு பார்த்ததற்காக, பிரிட்டிஷ்*

*உளவுத்துறைக்கு இன்னொரு பெயரான "அந்நிய ஏகாதிபத்தியத்திற்காக" வேலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், இசுராலினிச (Stalinist) இரகசியப் காவல் படையினரால் (உர்சாட் பெஸ்பீசெஸ்ட்வா) கைது செய்யப்பட்டார். 1948 – இல் ஒரு காட்சியான விசாரணைக்குப் பிறகு அவர் கொல்லப்பட்டார். போலந்தில் உள்ள கம்யூனிஸ்ட் ஆட்சியால் 1989 வரை அவரது அருஞ்செயல்கள் மற்றும் என்ன ஆனார் என்பது பற்றிய தகவல்கள் வெளிவராமல் அடக்கப்பட்டிருந்தன.*

*பிலெக்ஸ்கி தனது முயற்சியின் காரணமாக "சிறந்த போர்க்கால கதாநாயகர்களில் / வீரர்களில் ஒருவராகக்" கருதப்படுகிறார். போலந்தின் தலைமை ரபி மைக்கேல் ஷுட்ரிச் அவர்கள் The Auschwitz Volunteer எனும் புஸ்தகத்தில் பின்வருமாறு எழுதுகிறார்: தைரியத்திற்கு அப்பாற்பட்டவர், "கடவுள் மனிதனைப் படைத்தபோது, நாம் அனைவரும் கேப்டன் விட்டோல்ட் பிலெக்ஸ்கியைப் போல ஆசீர்வாதமான நினைவுக்குரியவர்களாக இருக்க வேண்டுமென்று கடவுள் சிந்தித்திருப்பார்." பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர் நார்மன் டேவிஸ் என்பவர் பின்வருமாறு எழுதுகிறார்: "நினைவுபடுத்தப்படுவதற்கும் கொண்டாடப்படுவதற்கும் தகுதியான ஒரு நேசமான வீரர் இருந்தார் என்றால், அது சில சகாக்களை மாத்திரமே கொண்ட இவரே ஆவார்." 27 ஜனவரி 2013 அன்று அமெரிக்க ஹோலோகாஸ்ட் நினைவு அருங்காட்சியகத்தில் நடைபெற்ற சர்வதேச ஹோலோகாஸ்ட் நினைவு தினத்தின் நினைவேந்தல் நிகழ்வில், போலந்து தூதர் Ryszard Schnepf என்பவர் பிலெக்ஸ்கியை "போலந்தின் வீரர்களுள் ஒரு மாணிக்கம்" என்றும், "போலந்து தேசபக்திக்கான மிக உயர்ந்த முன்மாதிரி" என்றும் விவரித்தார்.*

***இயேசுவினுடைய பலியின் முழுமையான படத்தை நாம் நினைவில் கொள்வோமாக:***

***கொலோசெயர் 1:18 – 20:** **அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர். சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர்***

***சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.***

*இங்குள்ள அம்சங்களைக் கவனியுங்கள்: நம்மிடம் இயேசுவும், அவரால் அழைக்கப்பட்ட சபையும் இருக்கின்றனர். பின்னர் தேவன், இயேசு மற்றும் அவரது பலியின் மூலமாக, சகலத்தையும் ஒப்புரவாக்கி, சமாதானத்தை உண்டுபண்ணுவார் – இது சபையைக்காட்டிலும் அதிகமான ஒன்றாக இருக்கும் – மீட்பு மாபெரியளவில் இருக்கும்.*

***அப்போஸ்தலர் 3:21, 19: உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டியிருந்த... முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கு...***

*தேவன், இயேசுவின் மூலமாக, சகலரையும் தம்மோடு ஒப்புரவாக்கிக்கொள்வது மாத்திரமல்லாமல், சகலத்தையும் மீட்டெடுத்து வருகிறார். ஒன்றை மீட்டெடுத்தால், அது பழைய நிலைக்குத் திரும்பும். இந்த மறுசீரமைப்பைப் பற்றி தீர்க்கதரிசிகளும் பேசியிருக்கிறார்கள் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுகிறார். அவர்கள் என்ன கூறியிருந்தனர்?*

***சிலவற்றை மாத்திரம் நாம் பார்க்கலாம்:***

***ஏசாயா 51:3: கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல்செய்வார்; அவர் அதின் பாழான ஸ்தலங்களையெல்லாம் தேறுதலடையச் செய்து, அதின் வனாந்தரத்தை ஏதேனைப்போலவும், அதின் அவாந்தரவெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப்போலவும் ஆக்குவார்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் துதியும் கீதசத்தமும் அதில் உண்டாயிருக்கும்.***

*ஏதேனின் பரிபூரணம் இழந்துபோகப்பட்டிருந்தது, ஆனால் வருங்காலத்திலோ பூமியின் பாழான ஸ்தலங்கள் எப்படி இருக்கப்போகிறது என்பது பற்றி ஏசாயா தீர்க்கதரிசி கூறுகிறார். மீட்பானது திரும்பக்கொடுத்தலைக் கொண்டுவரும் (Redemption brings restitution).*

***மீகா 4:1 – 5: ஆனாலும், கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்பட்டிருக்கும், எல்லா ஜாதிகளும் அதினிடத்திற்கு ஓடிவருவார்கள். திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்.***

*இவை பூமியின் எதிர்க்காலத்திற்குரிய பிரத்தியேகமானவைகளாகும்! தேவனையே தேடுகிற பல தேசங்களிருக்கப்போகின்றன. அவர்கள் இஸ்ரயேலை முன்மாதிரியாகக் கொண்டு தேவனுடைய வழிகளில் நடப்பார்கள்.*

***அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்துகொள்ளுவார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. அவனவன் தன்தன் திராட்சச்செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்; சேனைகளுடைய கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று. சகல ஜனங்களும் தங்கள் தங்கள் தேவனுடைய நாமத்தைப் பற்றிக்கொண்டு நடப்பார்கள்; நாங்களும் எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைப் பற்றிக்கொண்டு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நடப்போம்.***

*தேவன் சமாதானத்தின் வழிகளை உலகத்திற்குப் போதிப்பார் – **தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள் – இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை** – மாறாக அவர்கள் அனைவரும் சமாதானமாக வாழ்வார்கள் – ஒவ்வொருவரும் தேவனுக்குக்கீழாக ஜீவிக்கும்போது தங்களுக்கும் அனைவருக்கும் கொடுக்கக்கூடிய திறனுடன் இருப்பார்கள்.*

*இப்போது இயேசுவுக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பவர்கள் பரலோகத்தில் ஒரு சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்வார்கள், "மற்ற அனைவரும்" நியாயத்தீர்ப்பு நாளில், இயேசுவுக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பதை நிரூபித்தவுடன், பூமியில் ஒரு சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.*

*தேவனுடைய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்!*

***பின்வருமாறு வேத வாக்கியம் சொல்வதில் எந்த ஆச்சரியமுமில்லை:***

***பிலிப்பியர் 2:8 – 11: அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.***

புதுசிருஷ்டியின்
பொக்கிஷசாலை

see more new booklets and Reprints at
www.foodfornewcreature.com